# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 265–2023

| L.W.1 P.W.1 | | |
|---|---|---|
| Name: | மகேஷ்வரன் | Caste: |
| Father's Name: | ராஜேந்திரன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:25/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026

(எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது மூலக்கரையில் குடியிருந்து சென்னையில் CNC ஆபரேட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். தீபாவளியோ, பொங்கலோ ஒரு விழா சமயத்தில் 2021–ஆம் வருடத்தில், மதியம் சுமார் 12–லிருந்து 1 மணியளவில் நீல நிற Max 100 இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டுக் கொல்லைப்புறமாக வந்தனர். ஆஜர் எதிரிகளில் மஞ்சள் நிற சட்டை அணிந்தவர் (மேற்படி மஞ்சள் நிற சட்டை அணிந்த எதிரி 2–வது எதிரியான அஜீத்குமார் என்பது பதிவு செய்யப்படுகிறது). மேற்படி இருசக்கர வாகனத்தை இயக்கினார். Purple நிற சட்டை அணிந்தவர் ஆட்டை பிடித்து இருசக்கர வாகனத்தில் நடுவில் வைத்தார். (மேற்படி Purple நிற சட்டை அணிந்த எதிரி 1–வது எதிரியான தமிழரசன் என்பது பதிவு செய்யப்படுகிறது). எங்கள் வீட்டு மேற்கு திசை நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றனர். வாகன எண் எனக்கு நினைவில்லை.

நான் சத்தம் போட்டதில் அங்கிருந்த பாண்டியன், துர்க்காராமன், வெங்கடாச்சலம், முருகானந்தம் ஆகிய நால்வரும் அவர்களது பைக்கை எடுத்துக் கொண்டு, ஆடு திருடிச் சென்றவர்கள் பின்னால் சென்றனர். நானும் அவர்கள் பின்னாலே சென்றேன். வடபாதி பேருந்து நிறுத்ததின் அருகில் அவர்களை மடக்கி பிடித்து ஆட்டினை வாங்கிக் கொண்டு, பின்னர் அவர்களையும் அழைத்துக் கொண்டு, எங்களது வீடான தென்பாதிக்கு சென்று, அங்கிருந்து போலிசாருக்கு தகவல் கொடுத்து, போலிசார் வந்த

பின்னர் அவர்களிடம் ஒப்படைத்தோம். நாங்களும் வாய்மேடு காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகாரானது அ.த.சா.ஆ1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் இருசக்கர வாகனத்தின் புகைப்படம் தான் எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனமாகும். இந்த இருசக்கர வாகனத்தை நான் தான் காவல் நிலையம் ஓட்டிச் சென்று ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆடு தான் எதிரிகள் திருடிச் சென்ற என்னுடைய ஆடாகும். **இருசக்கர வாகனம் மற்றும் ஆட்டின் நிழற்படங்கள்–2 அ.த.சா.ஆ.2 மற்றும் 3–ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( ஆடு மற்றும் இருசக்கர வாகனத்தின் புகைப்படங்களை குறியீடு செய்ய கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார் என்பது பதிவு செய்யப்படுகிறது).**

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

முன் விசாரணையில் சொன்ன சம்பவ நேரத்தை தான் புகாரிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. புகாரில் தென்பாதி கிராமத்திற்கு போலிசாரை வரவழைத்து ஆடு, வாகனம் மற்றும் எதிரிகளை ஒப்படைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அவ்வாறு இவ்வழக்கு புகாரில் கண்டிருக்கவில்லை என்றால், அது நான் கொடுத்த புகார் அல்ல என்றால் சரி. ஆட்டை போலிசார் தென்பாதி கிராமத்திலேயே வைத்து, என்னிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரி. நாங்கள் எந்த வகையான இருசக்கர வாகனத்தில் எதிரிகளை விரட்டினோம் என்று புகார், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. எதிரிகள் என்ன படித்துள்ளார்கள் என்று நாங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி. எதிரிகள் ITI படித்துவிட்டு AC and Fridge பழுது பார்க்கும் வேலை செய்து வருகிறார்கள் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது.

புகாரில் கருப்பு நிற கிடா எனது வீட்டு கொல்லைப்புறத்தில் மேய்ந்து வந்ததாக சொல்லியுள்ளேன், சம்பவ சமயத்தில் அதன் எடை எனக்குத் தெரியாது. கிடாவின் தோராயமான மதிப்பு குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. கிடாவை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்து ஆஜர்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடாத காரணத்தால் தான் கிடாவை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்து ஆஜர்படுத்தவில்லை

என்றும், போலிசாரிடமே பெற்றுச் சென்றுவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 12.02.2026)**
**Vedaranyam(F.A.C.)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 265–2023

| L.W.2 P.W.2 | | |
|---|---|---|
| Name: | பாண்டியன் (எ) குலசேகர பாண்டியன் | Caste: |
| Father's Name: | சுப்பிரமணியன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026

(எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது மூலக்கரையில் குடியிருந்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1–ஐத் தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 2021 பொங்கல் சமயத்தில் மதிய நேரம் மூலக்கரை குளத்தங்கரை மற்றும் எஸ் பெண்ட் அருகே இருந்த கருப்பு நிற கிடாவினை ஆஜர் எதிரிகள் இருவரும் Suzuki Max 100 இருசக்கர வாகனத்தில் வந்து, ஆஜர் எதிரிகளில் Purple நிற சட்டை அணிந்தவர் ஆட்டை பிடித்து இருசக்கர வாகனத்தில் நடுவில் வைத்தார். (மேற்படி Purple நிற சட்டை அணிந்த எதிரி 1–வது எதிரியான தமிழரசன் என்பது பதிவு செய்யப்படுகிறது). மேற்படி ஆஜர் எதிரிகளில் மஞ்சள் நிற சட்டை அணிந்தவர் (மேற்படி மஞ்சள் நிற சட்டை அணிந்த எதிரி 2–வது எதிரியான அஜீத்குமார் என்பது பதிவு செய்யப்படுகிறது) இருசக்கர வாகனத்தை ஓட்டினார்.

ஆட்டை திருடிக் கொண்டு மேற்படி எதிரிகள் இருசக்கர வாகனத்தில் சென்றவர்களை நானும், வெங்கடாச்சலம், துர்க்காராமன், முருகானந்தம் ஆகியோர் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் துரத்திச் சென்று வடபாதி மாதா கோவில் அருகே எதிரிகளை பிடித்தோம். பின்னர், எங்கள் ஊருக்கு எதிரிகளையும், கிடாவினையும் அழைத்து வந்தோம். ஊர் பஞ்சாயத்தில் எதிரிகளை போலிசாரிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது. போலிசார் எங்கள் ஊருக்கு வந்தபோது 3.30 முதல் 4 மணியளவில் போலிசாரிடம் எதிரிகளையும், எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தையும்

ஒப்படைத்தோம். ஆட்டினையும் போலிசார் எடுத்துச் சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் இருசக்கர வாகனம் தான் எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனமாகும் மற்றும் கிடாவின் புகைப்படம் தான் எதிரிகள் திருடிச் சென்ற ஆடாகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

போலிஸ் விசாரணையில் சம்பவமானது மாலை நேரத்தில் நடந்ததாக சொன்னேன். போலிஸ் விசாரணையில் மூலக்கரை குளத்தங்கரை மற்றும் எஸ் பெண்ட் அருகே இருந்த கருப்பு நிற கிடாவினை ஆஜர் எதிரிகள் எடுத்துச் சென்றதாக சொல்லியுள்ளேன். எதிரிகளின் பெயர் எனக்குத் தெரியாது. கிடாவினை தென்பாதி கிராமத்தில் வைத்து அ.சா.1னிடம் போலிசாரால் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கிடா ஒப்படைக்கப்பட்டது குறித்து, மேற்படி என்னிடமும், வெங்கடாச்சலம், துர்க்காராமன், முருகானந்தம் ஆகியோரிடமும் கையொப்பம் பெறப்பட்டது. அப்போது மாலை நேரம். நேரம் சரியாக நினைவில்லை.

எதிரிகள் ITI படித்துவிட்டு AC and Fridge பழுது பார்க்கும் வேலை செய்து வருகிறார்கள் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. அவ்வாறு எதிரிகள் AC and Fridge பழுது பார்க்கும் வேலைக்கு சென்றுவிட்டு வரும்போது, எதிரிகள் மீது சந்தேகம் கொண்டு அவர்களை பிடித்து, நாங்கள் அடித்து, கொடுமை செய்த காரணத்தால், அதிலிருந்து தப்பிக்க எதிரிகளை போலிசாரிடம் ஒப்படைத்து, ஊராட்சி மன்ற தலைவரின் அதிகாரத்தை பயன்படுத்தி, எதிரிகள் மீது பொய் வழக்கு புனையப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 12.02.2026)**
**Vedaranyam(F.A.C.)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 265–2023

| L.W.3 P.W.3 | | |
|---|---|---|
| Name: | துர்க்காராமன் | Caste: |
| Father’s Name: | நாராயணசாமி | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:58/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026

(எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது மூலக்கரையில் குடியிருந்து கீழ்வேளூர் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1–ஐத் தெரியும். அவர் எனது எதிர் வீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 14.01.2021 பொங்கலன்று மாலை 4 முதல் 5 மணியளவில், எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள வளைவிற்கு அருகே நின்று கொண்டிருந்த கருப்பு நிற கிடாவினை எதிரிகள் இருவரும் Suzuki இருசக்கர வாகனத்தில் வந்து எடுத்துச் சென்றார்கள். எதிரிகளில் யார் ஆட்டினை எடுத்துச் சென்றார்கள் என்பதையும், யார் வாகனத்தை ஓட்டினார்கள் என்பதையும் நான் பார்க்கவில்லை.

ஆட்டை திருடிக் கொண்டு மேற்படி எதிரிகள் இருசக்கர வாகனத்தில் சென்றவர்களை நானும், வெங்கடாச்சலம், பாண்டியன், முருகானந்தம் ஆகியோர் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் துரத்திச் சென்று வடபாதி மாதா கோவில் அருகே எதிரிகளை பிடித்தோம். பின்னர், ஊர் பஞ்சாயத்து தலைவருக்கு அலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவர் வந்தார். பஞ்சாயத்து போர்டில் வைத்து போலிசாரிடம் மாலை சுமார் 6 மணியளவில் போலிசாரிடம் எதிரிகளையும், எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தையும், கிடாவினையும் ஒப்படைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

முன் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஊராட்சி கட்டடத்திலிருந்து போலிசார் எதிரிகளை அழைத்துச் செல்லும்போது மாலை சுமார் 6 மணியிருக்கும். எதிரிகளை சம்பவ இடத்தில் இருந்தவர்கள் அடித்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 12.02.2026)**
**Vedaranyam(F.A.C.)**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 265–2023

| L.W.4 P.W.4 | | |
|---|---|---|
| Name: | முருகானந்தம் | Caste: |
| Father's Name: | கருப்பையன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026

(எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது மூலக்கரையில் குடியிருந்து லாரி ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1–ஐத் தெரியும். அவர் எனது வீட்டிலிருந்து 5 வீடு தள்ளியுள்ளார். ஆஜர் எதிரிகள் தான் கிடாவினை திருடிச் சென்றவர்கள். கடந்த 14.01.2021 பொங்கலன்று மாலை 4.30 மணிக்கு மேல், மூலக்கரை குளத்தங்கரை அருகே உள்ள எஸ் வளைவிற்கு அருகே நின்று கொண்டிருந்த கருப்பு நிற கிடாவினை எதிரிகள் Suzuki Max 100 இருசக்கர வாகனத்தினை ஆஜர் எதிரிகளில் மஞ்சள் நிற சட்டை அணிந்தவர் (மேற்படி மஞ்சள் நிற சட்டை அணிந்த எதிரி 2–வது எதிரியான அஜீத்குமார் என்பது பதிவு செய்யப்படுகிறது) இருசக்கர வாகனத்தை ஓட்டினார். பின் அமர்ந்து வந்த ஆஜர் எதிரிகளில் Purple நிற சட்டை அணிந்தவர் ஆட்டை பிடித்து இருசக்கர வாகனத்தில் நடுவில் வைத்தார். (மேற்படி Purple நிற சட்டை அணிந்த எதிரி 1–வது எதிரியான தமிழரசன் என்பது பதிவு செய்யப்படுகிறது).

ஆட்டை திருடிக் கொண்டு மேற்படி எதிரிகள் இருசக்கர வாகனத்தில் சென்றவர்களை நானும், வெங்கடாச்சலம், பாண்டியன், துர்க்காராமன் ஆகியோர் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் துரத்திச் சென்று வடபாதி மாதா கோவில் அருகே எதிரிகளை பிடித்தோம். எதிரிகளையும், அவர்களது இருசக்கர வாகனத்தினையும், ஆட்டினையும் எங்கள் ஊர் பஞ்சாயத்து ஆபிஸிற்கு அழைத்து வந்தோம். ஊர் தலைவருக்கு அலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவர் வந்தார்.

போலிசாரிடம் தகவல் தெரிவித்து, மாலை சுமார் 6.30–7 மணியளவில் வந்த போலிசாரிடம் எதிரிகளையும், எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தையும், கிடாவினையும் ஒப்படைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

முன் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஊராட்சி கட்டடத்திலிருந்து போலிசார் எதிரிகளை அழைத்துச் செல்லும்போது மாலை சுமார் 6 மணியிருக்கும். எதிரிகளை சம்பவ இடத்தில் இருந்தவர்கள் அடித்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 12.02.2026)**
**Vedaranyam(F.A.C.)**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 265–2023

| L.W.5 P.W.5 | | |
|---|---|---|
| Name: | வெங்கடாச்சலம் | Caste: |
| Father's Name: | ரெங்கநாதன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:53/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026

(எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது மூலக்கரையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1–ஐத் தெரியும். அவர் வீடு மூலக்கரை குளத்தங்கரை வளைவில் உள்ளது. ஆஜர் எதிரிகள் தான் கிடாவினை திருடிச் சென்றவர்கள். கடந்த 14.01.2021 அன்று மாலை 4.30 – 5 மணிக்கு குளத்தங்கரை வளைவு அருகே நின்று கொண்டிருந்த கருப்பு நிற கிடாவினை எதிரிகள் Suzuki இருசக்கர வாகனத்தினை ஆஜர் எதிரிகளில் மஞ்சள் நிற சட்டை அணிந்தவர் (மேற்படி மஞ்சள் நிற சட்டை அணிந்த எதிரி 2–வது எதிரியான அஜீத்குமார் என்பது பதிவு செய்யப்படுகிறது) இருசக்கர வாகனத்தை ஓட்டினார். பின் அமர்ந்து வந்த ஆஜர் எதிரிகளில் Purple நிற சட்டை அணிந்தவர் ஆட்டை பிடித்து இருசக்கர வாகனத்தில் நடுவில் வைத்தார். (மேற்படி Purple நிற சட்டை அணிந்த எதிரி 1–வது எதிரியான தமிழரசன் என்பது பதிவு செய்யப்படுகிறது).

நானும், பாண்டியன், துர்க்காராமன், முருகானந்தம் ஆகியோர் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் எதிரிகளை துரத்திச் சென்று வடபாதி மாதா கோவில் அருகே எதிரிகளை பிடித்தோம். எதிரிகளையும், அவர்களது இருசக்கர வாகனத்தினையும், ஆட்டினையும் எங்கள் ஊர் பஞ்சாயத்து ஆபிஸிற்கு அழைத்து வந்தோம். ஊர் தலைவர் மூலம் போலிசாரிடம் தகவல் தெரிவித்து, மாலை சுமார் 6.30–7 மணியளவில் வந்த போலிசாரிடம் எதிரிகளையும், எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தையும், கிடாவினையும் பஞ்சாயத்து போர்டில் வைத்து ஒப்படைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

முன் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஊராட்சி கட்டடத்திலிருந்து போலிசார் எதிரிகளை அழைத்துச் செல்லும்போது மாலை சுமார் 6 மணியிருக்கும். எதிரிகளை சம்பவ இடத்தில் இருந்தவர்கள் அடித்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 12.02.2026)**
**Vedaranyam(F.A.C.)**